தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2024

**7 வயதுப்பிரிவு**
(01.01.2017 – 31.12.2017 வரையில் பிறந்தோர்)

## தமிழர் பண்பாடு

தமிழர் பண்பாடு உலகின் தலைசிறந்த பண்பாடுகளுள் ஒன்று. இயற்கையைப் பேணி, தம்மையும் தம்மை நம்பியவர்களையும் கண்போலக் காத்து வாழ்வது எம் பண்பாடு. அச்சம் தவிர்த்து, அறம் போற்றி, தன்னிலை மாறாத பண்பட்ட வாழ்வை வாழ்பவர் நாம். அதனைக் காக்கப் போராடுவதும் பண்பு தவறாது வாழ்வதும் எமது தனித்தன்மைகள் ஆகும்.

வீட்டுக்கு வந்த விருந்தினரை வரவேற்று வழியனுப்பிய பின்னர், இன்னும் விருந்தினர் வரமாட்டார்களா? எனக் காத்திருக்கும் உயரிய பண்பைக் கொண்டவர்கள் நாங்கள். பெற்றோரது முதுமைக் காலத்தில் அவர்களைப் பாதுகாக்கும் பண்பாடு உடையவர் நாம்.

பெரியோர்களை மதிப்பதும் உறவுகளை முறை சொல்லி அழைப்பதும் எம் பண்பாட்டின் சிறப்புகள். போரில் வீரச்சாவடைந்த வீரர்களுக்கு நடுகல் அமைத்து வழிபடும் தொன்மையான பண்பாடு எங்களுடையது. அதன்வழியே தமிழீழ விடுதலைக்காகப் போராடி தங்கள் உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை வணங்குகிறோம்.

ஏனைய இனத்தவரது பண்பாடுகளையும் மதிப்போம். தமிழர் எம் பண்பாடுகளைப் பேணிக்காப்போம். தமிழராக வாழ்வோம்.

நன்றி,

வணக்கம்.